தலைநகரங்களிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமா? அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வேண்டிய நிதியாதாரங்கள் இல்லாத காரணத்தினால் விரிவு படுத்துவது சாத்தியம் இல்லை

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலே தர்மபுரி மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் கீழ் எடுத்துக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். மேலும் கடன் கொடுக்கலாம் என்றும் சொன்னார்கள். நகர்புறத்திற்கு கடன் பெறுபவர்களுக்கு ஒரு வீட்டுக்கு எவ்வளவு கடனாக கொடுக்கப்படுகிறது; கிராமப்பகுதியில் எவ்வளவு அளிக்கப்படு கிறது என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே வீடுகள் கட்டுவதற்கு இரண்டு லட்சம் வீடுகள் என்று கொண்டு வந்திருக்கிறோம். அந்த திட்டத்திலே அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கேள்விக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை, இருந்தாலும் அங்கே 1½ சென்ட் சொந்தமாக உள்ளவர்கள் அரிசனங்களாக இருந்தால் மூவாயிரம் ரூபாய் தரப்படுகிறது: அதில் ஆயிரம் ரூபாய் மானியமாக தரப் படுகிறது. இதற்கு வட்டியில்லை. ஆகவே அதைப்போல அரிசனமல்லாதவர்களுக்கும் மூவாயிரம் ரூபாய் தரப்படுகிறது. இது நீண்ட கால தவணையில் தரப்படுகிறது. அரிசனங்கள் அல்லா தவர்கள், அரிசனரோடு இணைந்து வாழ்வார்களானால் 'இதிலே சப்ளிமெண்டரி கேட்க முடியாது, 'எக்ஸ்ட்ராவாக' சொல்கிறேன் அவர்களுக்கு இந்த ஆயிரம் ரூபாய் மானியமாகத் தரப்படும்,

பண்ணைக்காட்டில் குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண். 1056— திரு. கா. கோபாலகிருஷ்ணன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

அ) கொடைக்கானல் தாலுகா பண்ணைக்காட்டில் குடிநீர் வழங்குவதற்கு போடப்பட்டதிட்டமும் வேலைகளும் பாதியிலேயே நின்று இருப்பது அரசுக்குத் தெரியுமா?

ஆ) ஆம் எனில் விரைந்து குடிநீர் கிடைக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) திட்டம் நிறுத்த படவில்லை. தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1981 மே 11]

ஆ) திட்டத்தை விரைவில் முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கான்ட்ராக்டர் வேலையை முடித்துத் தருவதாக ஒப்புக் கொண்ட காலம் என்ன? காலதாமதத்திற்குக் காரணம் என்ன? வேண்டுமென்றே அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதால், கான்ட்ராக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்குத் தேவையான புவி ஈர்ப்பு குழாய்கள் பதிக்கும் வேலைகள் மலையைச் சார்ந்த இடங்களில் செய்யவேண்டியிருப்பதால் இக் குழாய்களை எடுத்துச் செல்லும் பணிகளில் மிகுந்த சிரமம் இருக்கிறது. பொருள்களுக்கும், ஆட்களுக்கும் ஆபத்து விளைவிக்க கூடியதாக உள்ளது. மேலும் திறமை வாய்ந்த வேலையாட்களும் உடனடியாக கிடைப்பதில்லை. ஆகவே இவ்வேலைகளில் முன்னேற்றம் காட்டுவதில் சில நேரத்திலே மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆயினும் இந்த வேலைகளை சீக்கிரம் ஒரு ஈடுபாட்டு உணர்வுடன் ஜூன் 1981க்குள் செய்து முடிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கும் சாகுபடிக்கும் தண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 1057 திரு. எம். செல்லமுத்து. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து தஞ்சை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைத்து சிறு விவசாயிகளுக்கும் சாகுபடிக்கும் தண்ணீர் கொடுக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தஞ்சை மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்கு தேவையான தண்ணீர் கொடுக்க, குழாய் கிணறுகள் அமைக்கத் திட்டமிட்டு உபரி நிதியிலிருந்து 50 விழுக்காடும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் உதவித்தொகையாக 50 விழுக்காடும் பெற்று இத்திட்டம் தொடங்க உத்தரவிடப்பட்டது. 1979–80ஆம் ஆண்டில் பரிட்சார்த்தமாக 170 ஆழ் குழாய் கிணறுகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு அவை அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. நடைமுறையில் இந்த சமுதாயக் கிணறு திட்டத்தின் வெற்றியைக் கொண்டு மேலும் பல கிராமங்களுக்கு 1981-82 ஆம் ஆண்டில் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.